ஸ்ரீ திரிபுரஸுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்யதர்மம்.

कातर्यं समुदेति किंचिदपि न भ्रातर्यमात् किन्तु ते
चेतस्साधु विचिन्तय स्मरभिदा त्रातः प्रपन्नो नरः ।
एतावन्ति जनूंषि हन्त विषयैरेव प्रविध्वंसिता-
न्येकं जन्म शिवार्पणं यदि करोष्येतेन का ते हतिः ॥

स्तुतिपद्धतिः ॥

ஹே ஸஹோதரனே! யமனிடமிருந்தும் உனக்குக் கொஞ்சங்கூட பயம் உண்டாகவில்லை. மன்மதனுக்குச் சத்ருவான ஸ்ரீ பரமேசுவரரைச் சரணமாக அடைந்த மனிதன் யமனிடமிருந்து நன்கு பாதுகார்க்கப்படுகிறான். ஹே மனமே! இவ்விஷயத்தை நீ நன்கு ஆலோசித்து அந்தப் பிரபுவையே சரணமாக அடை. இதுவரையில் அடையப்பட்ட கோடிக்கணக்கான பல ஜன்மாக்களை விஷயங்களுக்கு அர்ப்பணஞ்செய்து அவ்விஷயங்களால் அந்த ஜன்மாக்கள் பூராவும் கஷ்டத்தைஅடையும்படி செய்து வீணாக்கப்பட்டன. இந்த ஒரு ஜன்மாவை ஸ்ரீ சந்திரசேகரருக்கு அர்ப்பணம்செய்வாயாகில் அதினால் உனக்கு என்ன குறைவு எற்படும்?

ஒரு ஆஸ்திகன் தன் மனதை ஸகோதரமாகப் பாவித்து ஹே மனமே! இதுபர்யந்தம் ஒவ்வொரு ஜன்மாவிலும் உன்னிஷ்டம்போல் பகவானை ஸ்மரிக்காமல் விஷயங்களில் பற்றுதலடைந்து அவைகளில் மூழ்கியதால் பல துன்பங்களை அனுபவித்து ஜன்மாவையும் பயனற்றதாகச் செய்ததைத் தவிர யாதொன்றும் அடையப்பட்டதாகத் தெரியவில்லை. இந்த ஒரு ஜன்மாவை நான் கேட்டுக்கொள்வதற்காக பரமசிவனுடைய கைங்கர்யத்தில் அர்ப்பணம் செய். அதினால் உனக்கு யாதொரு குறைவும் உண்டாகாது. விசேஷமான க்ஷேமத்தைப் பெறுவாய் என்று உபதேசிக்கின்றார்.

உபபத்திராதிபர்.

ஆர்ய தர்மம்.

குரோதன-ஸு பங்குனி-மீ ருஉ

# ஸ்ரீ தப்ரபக்த சரிதம்.

மஹாசிவராத்திரி புண்யகாலத்தில்
அத்வைதஸபா பண்டிதரான பிர்மஸ்ரீ
யஜ்ஞஸ்வாமி சாஸ்திரிகளவர்களால் செய்யப்பட்ட
உபன்யாசத்தின் சுருக்கம்.

---

(ககள-வது பக்கத்தொடர்ச்சி.)

அந்த ஆலயத்தில் அகத்தி மாத்தடியில் யோகதண்டத்தின் நுனியில் வைக்கப்பட்ட தமது மணிக்கட்டில் ஸ்தாபிக்கப்பட்ட முகத்தையுடையவரும்; ஜபமாலையால் சுத்தப்பட்ட விபூதிப்பையைத் தமக்கெதிரில் உடையவரும்; வழிநடந்து வந்தசிரமத்தால் கண்களை மூடிக்கொண்டும், முதிர்ந்த வயதையுடைய சரீரத்துடனும், தொங்குகிற புருவங்களுடனும் உட்கார்ந்துகொண்டு பரம்பொருளைத் தியானிப்பவர்போலிருப்பவருமாகியகைலாசாதிபதியைப் பார்த்துத் தப்ரபக்தர் அடங்கா ஆனந்தத்துடன் பரவசமாய் அவருடைய பாதகமலங்களில் ஸாஷ்டாங்கமாக நமஸ்கரித்தார். தரித்திரனுக்கு நிதியைக் கண்டால் எவ்வித ஆனந்தமேற்படுமோ அவ்வித ஆனந்தத்தை அந்தஸமயம் அவர் அடைந்தார். தமதுகால் பெருவிரல்களைப் பிடித்துக்கொண்டு பூமியில் வந்தனத்துடன் இருக்கும் தப்ரபக்தரைப் பார்த்த கருணாநிதியான காளகண்டர் அவரை எழுந்திருக்கும்படி சொல்லி அவருடைய பெயரை வினவினர்.

माहेश्वरपदाम्भोजपरमाणुरहं विभो ।
दभ्रभक्तोऽस्मि दासोऽस्मि प्रसादः क्रियतां मयि ॥

இவ்விதம் வினவப்பட்ட தப்ரபக்தர் "ஹே மஹாத்மன்! விபோ ஸ்ரீ மஹேச்வரபக்தர்களின் பாதகமலங்களுடைய பரமாணு நான், 'தப்ரபக்தன்' என்று என்னை அழைப்பார்கள். தங்களுடைய தாஸன். என்னிடம் அனுக்கிரகம் செய்யவேண்டும். மிகவும் புண்ணியமான குதபகாலம் இப்பொழுது நேர்ந்திருக்கிறது. ஹே ஸ்வாமிந் தயவுசெய்து தாங்கள் என்னுடைய ஆதித்தியத்தைக் கிரஹித்துக் கொள்ளவேண்டும். என்னுடைய கிருகத்தைத் தங்களுடைய பாததூளிகளால் பரிசுத்தமாகச் செய்யவேண்டும். எவ்வித ஆகாரம் தங்களுக்குப் பிரியமோ அவ்வித ஆகாரத்தைக் கொடுக்கிறேன்" என்று இவ்விதம் பலவாறாகப் பிரார்த்தித்து அதிதிகளிடத்தில் அதிகப் பிரியம்கொண்ட அவர் மறுபடியும் ஈசனை நமஸ்கரித்தார். மாயாசிவபக்தரான அந்த ஹரர் தப்ரபக்தரிடம் அடியில் வருமாறு கூறுகின்றார்—"தப்ரபக்தர், தப்ரபக்தர்" என்று பலராலும் புகழப்பட்டுவிசேஷமான கீர்த்திவாய்ந்த அந்த தப்ரபக்தன் நீ தானா? சிவபக்தர்களுக்கு சிரத்தையுடன் மிருஷ்டான்னத்தைக் கொடுப்பவன் உன்னைப் போல் நீதான் ஆகிறாய். இப்பொழுது அபபரணி சைத்திர தினம் இது பரமேசுவர பத்திநிக்கு மிகவும்பிரியமானது. இன்று யாருக்காவது அன்னமிட வேண்டியது அவசியம். போஜனம் செய்திருந்தாலும் மறுபடியுமாவது ஒருவரை அழைத்து அவசியம் அன்னமிடவேண்டும். ஹே தப்ரபக்த, நீ சிறந்த பக்தனாகவிருக்கிறாய். நான் இப்பொழுது பசியுள்ளவனாயிருக்கிறேன். ஆனாலும், உன்னிடம் ஒருவார்த்தை சொல்லவேண்டியதுஉண்டு, அது கொஞ்சம் அப்பிரியமான வார்த்தை, அதிதியாகவந்த நான் அப்பிரியமான வார்த்தையைச் சொல்வது உசிதமில்லை. இந்த மாதிரியான வார்த்தையை நானும் சொல்லக்கூடாது. நீயும் கேட்பது சரியல்ல. மாயைக்கு ஸ்வாதீனமாயிருந்து கொண்டு லௌகிக காரியங்களில் விசேஷப் பற்றுதலேபடைந்த நீ எங்கே, அதற்கு நேர்மாறுதலான நெறியிலிருக்கும் நான்எங்கே. அலௌகிகர்களான எம்போன்றவர்களுடைய வசனம் லௌகிகர்களுக்கு திருப்தியாய் இருக்கமாட்டாது. ஆகையால் என்பேரில் வருத்தப்படாமல் கிருகம்சென்று வேறு யாரையாவது அழைத்துப்

போஜனம் செய்துவைப்பதுதான் உசிதம்" என்று கூறிவிட்டுத் தான் வெளியில்போக எத்தனித்தார். உடனே பாதுகைகளை சரணங்களில் மாட்டிக்கொண்டு யோகதண்டத்தையும் எடுத்துக் கொண்டு புறப்படும் அந்தப் பரமேசுவரனைப் பக்தியுடன் நமஸ்கரித்துத் தாங்கள் இவ்விதம் மொழிவது சரியல்ல. தங்களுக்கு எதை அறிவிக்கவேண்டுமென்று தோன்றுகிறதோ அதை லௌகிகமாயிருந்தாலும், வைதிகமாயிருந்தாலும் சங்கையின்றி என்னிடம் தெரிவித்து அனுக்கிரகிக்க வேண்டும். நான் அவ்விதமே செய்யச் சித்தனுயிருக்கிறேன்" என்று மறுபடியும் தப்பபக்தர் பிரார்த்தித்தார்.

ஸ்ரீ நீலகண்டருடைய சரணங்களை விடாமல் பிடித்துக் கொண்டு இவ்விதம் பிரார்த்தனை செய்யும் தப்பபக்தனைப்பகவான் மறுபடியும் அகஸ்தியமரத்தடியில் உட்காரவைத்துச் செப்புகின்றார்—"தப்பபக்த, மிகவும் கோரமான என்னுடைய ஆகார நியமங்களைக் கேள். எனக்கு அன்னம் வேண்டாம், தயிர், பால், நெய், தேன் முதலான பதார்த்தங்களிலும் பிரியமில்லை. நன்கு பழுத்ததான கல்பக விருக்ஷத்தின் பலமாயிருந்தாலும் விருப்பமில்லை. மற்றுமுள்ள கறிகளும் வேண்டாம். பிரியமான ஆகாரத்தைக் கூறுகிறேன், கேள். ஜேஷ்டபுத்திரனுயிருக்கவேண்டும். சிறந்த லக்ஷணத்துடனிருக்கவேண்டும். ஐந்தல்லது ஆறுவயதிற்குமேல் இருக்கக்கூடாது. வித்யை, வினயம் இவைகளும் அவனுக்கு இருக்கவேண்டும். அந்தக்குலத்திற்கு அவன் ஒரே பையனுக இருக்க வேண்டும். மாதாபிதாக்களுக்கும் மற்றுமுள்ள ஜனங்களுக்கும் மிகவும் ப்ரீதி பாத்திரனுக இருக்கவேண்டும். இந்தப் புத்திரனை நன்றாய் ஸ்நானம் செய்துவைத்து மாதாமடியில் வைத்துக்கொண்டு கொஞ்சம்கூட வருத்தப்படாமல் பிதா கத்தியால் நகம், கேசம் இவைகளை விலக்கிப் பாக்கி அங்கங்களைக் கிரமமாக அறுத்து எடுத்துப் பத்னியிடம் கொடுத்து அவளும் துக்கப்படாமல் மிளகு ஜீரகம் முதலான ஸாமான்களைப் போட்டு வருவலாகச் செய்து காண்டியால் அந்த ஹவிஸ்ஸைச்சந்தோஷமாய்எனக்குப் போட்டால் திருப்தியுண்டாகும். இவ்விதம் நடத்த உனக்கு ஸாத்தியமா? முடியுமானல் வருகிறேன். இல்லாவிடில் எங்கு

அதிதிகளின் இஷ்டப்படி ஆராதிக்கும் பிரபுக்களிருக்கிறார்களோ அங்குச் செல்லுகிறேன். இது மிகவும் தாமஸ கிருத்யமான தால் உன்னிடம் சொல்வது அழகல்லவென்று நினைத்தேன். உனது நிர்ப்பந்தத்தால் தெரிவித்தேன். அதிதியை ஆராதனம் செய்து கீர்த்தியைப் பெறவேண்டுமென்கிற சந்தோஷமிருக்குமா கில் பத்னியிடமும் யோசித்து வேண்டிய காரியத்தைச் செய். இவ்வளவுதான் எனக்கு நடத்தவேண்டியது" என்றார். இவ் வசனத்தைச் செவியிற்கொண்ட தப்பபக்தரும் மிகுந்த சந்தோ ஷத்துடன் "அவ்விதமேசெய்கிறேன்"என்று அங்கீகரித்து தமது கிருகம் சென்று பார்யையின் அருகில் வந்தார்.

உபபத்திராதிபர்.

---

# குருபக்தியின் அவசியம்.

(கஉரு-வதுபக்கத்தொடர்ச்சி.)

பிறகு விழித்துக்கொண்ட குரு அசுபமான ரத்தம் பெரு கும்போது தன்னை எழுப்பாத காரணத்தைக் கேட்டார். அவ னது பொருமையையும்கவனித்து "நீஎந்த ஜாதியிற் பிறந்தவன்? உண்மையை ஒளிக்காதே" என்றார். கர்ணன் நடுநடுங்கித் தான் ஸூதஜாதியைச் சேர்ந்தவன் என்றான். அப்போது பாசுராமர்

अस्पर्धमानं न कथंच न त्वां जेता कश्चित्स्पर्धमानस्तु यासि ।
पराभूतिं नात्र विचार्यमस्ति प्रमादी त्वं भविता चास्त्रसंघे ॥

'நீ என்னிடம் உள்ளதை ஒளித்ததால் நான் உனக்குக் கற்பித்த அஸ்திரங்களையெல்லாம் நீ மறந்துவிடக்கடவது, ஆனால்போட்டி யோடும் ஆத்திரத்தோடும் சண்டைசெய்யாதகாலங்களில் உன்னை எவனும் ஜயிக்கமுடியாது, போட்டியோடு சண்டை செய்தால் தோல்வியை அடைவாய்' என்று சபித்தார்.

அதற்கனுகுணமாக பாரதயுத்தத்தில் அர்ஜுனனோடு கர்ணன் போட்டியுடன் யுத்தம் செய்யுங்கால் சகல அஸ்திரங்களையும் சரி

யானகாலங்களில் மறந்து அர்ஜுனனால் தோற்கடிக்கப்பட்டான். இன்றைக்கும் நாம் ஏதோ ஒரு விஷயத்தைச் சரியான காலத்தில் மறந்துவிட்டால் கர்ணசஸ்திரம் என்று உரையாடுகிறோம். இதனால் நாம் குருவிடம் பொய் முதலியவைகளைச் சொல்லி அவரது கோபத்திற்கு ஆளாகக் கூடாது. ஆனால் பெருந்துயரம் உண்டாகும்.

## முடிவுரை.

ஒரு சிஷ்யன் குருவிடம் கற்றுக்கொள்வதால் ஏற்படும் புண்யத்தை அவன் மாத்திரம் அடைவதில்லை. அவனைக்காட்டிலும் அதிகமாக அவனது குருவும் அவரது பரம்பரையும் அடைகிறார்கள். சிஷ்யனைப்போல் எட்டுமடங்குபலனை அவனது குரு அடைகிறார். அவருடைய குரு பதினாறுமடங்கு பலனையும், அவருக்கு முன்னோர்கள் இருபத்துநான்குமடங்கு பலனையும், தேவதைகள் ஆயிரக்கணக்கான மடங்கு பலனையும் பிரஹ்மதேவர் மஹௌகம் என்ற எண்ணிக்கையுள்ள பலனையும் அடைகிறார்கள். இவ்வாறு பல நன்மைகள் பலருக்கும் உண்டவதால் குருபக்திசெய்து குருமுகமாக ஸகல சாஸ்திரங்களையும் அப்பஸிப்பது எல்லா ஆஸ்திக சிரோமணிகளின் கடமையாகும். சுபம் !

எம். ராமராவ்,

மாத்வ ஸபைக் கார்யதர்சி.

---

# சுந்தரர்.

சுந்தரர் சைவசமயாசாரியர் நால்வருள் ஒருவர். இவர் கைலாசமலையிலே சிவபெருமானுடைய அடியார்களுள் ஒருவர். இவருக்கு அங்கே ஆலால சுந்தரர் என்பது பெயர். இவர் ஒரு நாள் சிவபிரானுக்குச்சூட்டும்பொருட்டுப்பூக்கொய்ய நந்தநவநத்திற்குச் சென்றார்; அக்கால், பார்வதி தேவியார் அணியவேண்டி அங்கே வந்து பூக்கொய்துகொண்டிருக்கும் அனிந்திதை, கமலினி என்ற இரண்டு பெண்களைக் கண்டார். அவ்விருவரும்

பார்வதி தேவியார் சேடிமார். ஆலால சுந்தரர் அந்த இரண்டு சேடிப் பெண்களையும் பார்த்தார்; ஆசைகொண்டார். அந்த இரண்டு பெண்களும் ஆலால சுந்தரரைப் பார்த்தனர்; ஆசை கொண்டனர். கடைசியில் மனத்தை மாற்றிக்கொண்டனர்; ஆலால சுந்தரர் சிவசந்நிதிக்கும், சேடிமார் தேவியார்சந்நிதிக்கும் சென்றனர்.

செல்லலும், தம்மிடத்திற்குவந்த ஆலால சுந்தரரை நோக்கி கடவுள் "அன்ப, நீ பெண்கள்மேல் இச்சைவைத்தாய். ஆதலின் தென்னாட்டிலே மானிடனாகப் பிறந்து உனது ஆசையை நிறை வேற்றிக்கொள்வாய்" என்றனர். கேட்ட ஆலாலசுந்தரர் மனங் கலங்கி வருந்தி வணங்கினர்; "கடவுளே தேவரீருடைய திருவடி களை எப்படி விட்டுப் பிரிவேன்? அடியேன் மனிதனாகி வாழ்க்கை யில் மயங்கும்போது தேவரீர் எழுந்தருளித் தடுத்து ஆட்கொள் ளவேண்டும்" என வேண்டினர். கடவுளும் இசைந்தனர். ஆலால சுந்தரரும் திருமுனைப்பாடி நாட்டிலே திருநாவலூரிலே அந்தணர் குலத்திலே ஆதிசைவ சடையனாரும் இசைஞானியாரும் செய்த தவப் பயனாக அவர்களுக்குப் புத்திரராக அவதாரம் செய்தார். அவரது பிள்ளைத் திருநாமம் நம்பியாரூர் என்பது. நம்பியாரூர் அந்த நாட்டு அரசராகிய நரசிங்கமுனையரால் இனிது வளர்க்கப் பட்டார்; உரியகாலங்களில் தமது வருணத்திற்கு ஏற்ற சம்ஸ்கா ரங்கள் செய்விக்கப்பட்டார்; எல்லாக்கலைகளிலும் வல்லவரானர்.

நம்பியாரூருக்கு விவாகம் செய்தற்கு உரிய பருவம் வந்தது. புத்தூர்ச்சடங்கவி சிவாசாரியாரது புத்திரியை மணந்துகொள்ள அவ்வூர்க்குச் சென்றனர்; மணவறையில் அமர்ந்தனர். அக்கால், சிவபிரானர் தமது அன்பரை ஆட்கொள்ள எண்ணினர்; ஒரு கிழப் பிராமணர் வடிவத்துடன் அங்கே தோன்றினர்; "ஹே, ஆரூர, எனக்கும் உனக்கும் ஒரு வழக்கு இருக்கின்றது; அதை முடித்துக்கொண்ட பிறகே நீ விவாகத்தைச் செய்துகொள்ள வேண்டும்" என்று கூறித்தடுத்தனர். நம்பியாரூர் உடன்பட்டார்; "வழக்கு யாது" என்று வினவினர். உடனே கடவுள் அவைய ரையும் பார்த்து "திருநாவலூரானாகிய நம்பியாரூரான் எனது அடிமை" என்றனர். நம்பியாரூர் "பிராமணருக்குப் பிராமணர்

அடிமையாதல் உண்டோ? நீ பித்தனே இங்ஙனம் கூறுவதற்கு?" என்றனர். கடவுள் "நான் பித்தனுயினும் நீ எனக்கு அடிமையே; என்னிடம் அடிமை ஓலை இருக்கின்றது" என்றனர்; அதைக் காட்டினர். நம்பியாரூரர் அதனைக் கிழித்தெறிந்தார். அந்தணர் திருவெண்ணெய்நல்லூர் அந்தணர்களது சபையிலே தெரிவித்தார்; 'நம்பியாரூரர் தமது அடிமையே' என்றதீர்ப்பைப்பெற்றூர். எல்லாருடனும் தாம் ஆட்கொண்ட நம்பியாரூரை அழைத்துக் கொண்டு அவ்வூரிலுள்ள திருவருட்டுறை என்னும் ஆலயத்தில் உள்ளே போனூர்; மறைந்தார்; அனைவரும் திகைத்து நின்றனர்.

நிற்றலும், சுந்தராகிய நம்பியாரூரர் 'தம்மை அடிமையாகக் கொண்டவர் கடவுளே' என்று உணர்ந்தார்; உள்ளே சென்று கூவினூர். ஆண்டவன் உமையோடும் விடைமீது தோன்றிக் காட்சியைத் தந்தார்; கைலையில் நிகழ்ந்த வாலாற்றைத் தெரிவித்தார். சுந்தரரும் ஆனந்தக் கண்ணீர்பாய, மெய்ம்மயிர்பொடிப்ப அடியற்ற மரம்போலக் கீழே வீழ்ந்தார்; எழுந்தார். ஆண்டவனே, தங்களது பெருமையை அடியேன் எவ்வாறு புகழ்வேன்" என்றனர். கடவுள் "சுந்தர, நீ எம்மோடு வன்சொற்களைப் பேசி 'வன்றொண்டன்' என்ற பெயரையும் பெற்றாய்! எம்மைப் 'பித்த' னென்றும் கூறினுய். அங்ஙனமே எம்மீது தமிழ்ப் பாடல்களைப் பாடுவாயாக" என்றனர். சுந்தரரும் "பித்தா பிறைசூடி" என்று வரும் திருப்பதிகத்தைப் பாடினூர். "அன்ப, இங்ஙனமே எமது புகழைப் பலவகையாகவும் பாடுவாயாக" என்று கூறிக் கடவுள் மறைந்தனர். தமது மணவினை நின்றுபோனமையை அறிந்த சடங்கவி சிவாசாரியாரது மகளார் சுந்தரரையே எண்ணியிருந்து சிவபதத்தை அடைந்தார். அப்பால், சுந்தரர் சிவபிரான் கோயில் கொண்டருளிய பல திருப்பதிகளுக்குச் சென்றூர்; ஆங்காங்கு திருப்பதிகங்களைப் பாடினூர்; கடவுள் அழைக்கத் திருவாரூருக்கு வந்தார்; கடவுளால் "தோழன்" என்று அழைக்கப் பெற்றூர்; அங்கே தங்கலானூர்.

இங்ஙனமாகக் கமலினி என்பவர் திருவாரூரிலே உருத்திர கணிகையார் குலத்திலே பரவையார் என்னும் பெயருடன் பிறந்து வளர்ந்து வருகிறூர். பரவையார்க்கு மங்கைப்பருவமும் வந்

தது. வழக்கம்போல ஆலத்யதிற்குச் சென்று வாலானர். ஒரு நாள் சுந்தரர் பரவையாரைக் கண்டனர்; மணந்துகொள்ள எண்ணினர். அங்ஙனமே பரவையாரும் கருதினர். திருவருள் கூட்டுவிக்கத் தொண்டர்கள் இருவருக்கும் விவாஹத்தைச் செய்து வைத்தார்கள். சுந்தரர் பரவையார் என்ற இருவரும் மிக மகிழ்ந்தனர். சுந்தரருக்கு அடியார்களுடைய வரலாறுகளை அறிந்துகொள்ளவேண்டும் என்ற அவாப் பிறந்தது. தெய்வத் தவக் குறிப்பால் "தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்" அடித்தோன்றத் திருத்தொண்டத் தொகையைப் பாடினர்; பல க்ஷேத்திரங்களுக்குச் சென்று திருப்பதிகங்களைப் பாடினர்; பல அற்புதச் செயல்களைச் செய்தனர். சிவபிரான் குண்டையூர்க்கிழார்க்கு அளித்த நெற்குவியலை "நீள நினைந்தடியேன்" என்னும் திருப்பதிகத்தைப் பாடித் திருவாரூருக்குக் கொண்டு வந்தார். திருநாட்டியத்தான்குடிக் கோட்புலியார் வேண்டுகோட்படி அங்குசென்று "சிங்கடியப்பன்" எனத் தம்மை அழைத்துக் கொண்டார் செங்கற்களைப் பொன்னாக்கினர். திருமுதுகுன்றர் அளித்த பொன்னைத் திருவாரூரிலே பெற்று அருள் பெற்றார்.

அப்பால், சுந்தரர் தொண்டை மண்டலத்திலுள்ள ஸ்தலங்களையும் தரிசனைசெய்ய எண்ணிச்சென்றார். ஆண்டுள்ள பல திருப்பதிகளையும் அடைந்து கடவுளைவணங்கினர். பதிகங்களைப் பாடினர். திருவொற்றியூரை அடைந்து அங்கேயே தங்கி இருந்தார். இப்படியாக, மற்றொரு சேடியாகிய அனிந்திதையார் ஞாயிறு என்னும் ஊரிலே ஞாயிறுகிழாருக்குப் புத்திரியாய்ப் பிறந்து சங்கிலியார் என்னும் பெயருடன் திருவொற்றியூர்க் கோவிலிலேயே இருந்து வருகிறார். அவர் ஆண்டவனுக்குப் பூமாலை கட்டிக் கொடுக்கும் திருத்தொண்டினைச் செய்து வந்தார், சுந்தரர் அனிந்திதையார் இருவரும் பார்த்துக் கொண்டனர். கடவுளருளால் அக்கோயிலிலுள்ள மகிழன்கீழே "உன்னை நான் பிரியேன்" என்ற சபதத்தைச் செய்துகொடுத்துச் சுந்தரர் அனிந்திதையாரை மணந்து கொண்டனர். இருவரும் அங்கேயே வாழ்ந்திருந்தனர்.

இவ்வாறு பல நாட்கள் செல்ல ஒருநாள் சுந்தரருக்கு திருவாரூருக்குச் செல்லவேண்டும் என்ற எண்ணம் உண்டாகியது.

'வன்மிக நாதரை மறந்திருந்தேனே' என்று வருந்தினர்; பதிகத்தைப் பாடினர் திருவாரூரைக் குறித்து நடந்தார்; திருவொற்றியூரை நீங்கினர். நீங்கலும், சபதத்தை மீறியமையால் சுந்தரருக்கு இரண்டு கண்களும் ஒளியிழந்தன. காரணத்தையும் அறிந்துகொண்டார். என்றாலும் வன்மீகநாதரைப் பார்க்கவேண்டும் என்ற ஆசை பெருகி வளரலாயிற்று. துயரத்தோடும் கடவுளைக்குறித்துப் பாடினர். பல திருப்பதிகளுக்குச் சென்றார்; காஞ்சீபுரத்தை அடைந்தார். அங்கே ஏகாம்பரநாதர் திருவருளால் இடக்கண் ஒளியினைப் பெற்றது. மெல்லமெல்லத் தெற்கு நோக்கிச் செல்வாராயினர். பல ஸ்தலங்களைக் கடந்து திருமுலட்டானத்திற்கு வந்தார். "மீளா அடிமை உமக்கே ஆளாய்" என்று தொடங்கும் பதிகத்தைப் பாடினர். வன்மீக நாதர் திருவருளால் வலக்கண்ணும் ஒளியினைப் பெற்றது. சுந்தரர் பெருமகிழ்வுற்றுத் திருவருளை வியந்து திருவாரூரை அடைந்தார். சங்கிலியாரை மணந்து கொண்டமையால் தம்மீது கோபமுற்றிருந்த பரவையாரைக் கடவுளுதவியால் சமாதனப் படுத்திப் பரவையாருடன் வாழ்ந்திருந்தார்.

இங்ஙனம் இருக்கும் நாளிலே சுந்தரரது பக்தி மேலீட்டைத் திருவருள் அறிவிக்க அறிந்த சேரமான் பெருமாள் திருவாரூருக்கு வந்தார். சுந்தரரைவணங்கினர். இருவரும் நண்பராயினர். சில நாட்களுக்கெல்லாம் சுந்தரர் பாண்டி நாட்டிற்குச் செல்லலுற்றார். அந்நாட்டிலுள்ள பல திருப்பதிகளையும் வணங்கிப் பதிகம் பாடினர். திருவாரூர் வந்தார். மீட்டும் சேரமான் வேண்டுகோளின்படி சேர நாட்டிற்குச் சென்றனர். வழியிலே பல அற்புதச் செயல்களைச் செய்தனர். சேரமானுடன் மகோதை நகரத்தை அடைந்தனர்.

இப்படிச்சிலநாட்கள் செல்ல ஒருநாள்சுந்தரர் திருவஞ்சைக்களத்திற்குப்போய் ஆலயத்தைஅடைந்து ஆண்டவனைநோக்கித் திருவடியில் சேர்த்துக் கொள்ளுமாறு "தலைக்குத்தலைமாலை" என்றுவரும் திருப்பதிகத்தைப் பாடினர். கடவுளருளால் ஒரு வெள்ளையானை வந்தது. அதன்மேல் ஏறிக்கொண்டு கைலாசமலைக்குச் செல்வாராயினர். இதனை அறிந்தார் சேரமான் பெரு

மாள் தமது தோழருடன் செல்ல எண்ணினர். அஞ்சைக்களத்திற்குச் சென்றார். வெள்ளையானையின் மீது ஏறிக்கொண்டுபோகும் சுந்தரரைக்கண்டார். தமது குதிரையின் காதிலே பஞ்சாக்ஷரத்தை ஓதி அதனை விரைந்து செலுத்தினர். இருவரும் கைலயங்கிரியை அடைந்தனர். ஆலால சுந்தரரானர் சேரமான் பெருமாளும் கணநாதரானர். பரவையார், சங்கிலியார் இருவரும் முறையே கமலினி, அனிந்திதை என்ற பெயருடன் தேவியாரின் சேடிகளானர்கள். சுந்தரர் பாடிய பதிகங்கள் 38, 000. கிடைத்துள்ள திருப்பதிகங்கள் 100.

தண்டமிழ்த்தொண்டன்.

---

# ஸ்ரீ ஹரிஹர வேதவித்யா பீடம்.

சென்னைக்கடுத்த மாம்பலத்தில் பிராமணசபையினுதரவில் சென்றவிஜயதசமியன்று ஷ்டி வித்யாபீடம் ஆரம்பிக்கப்பட்டது. இதன் வித்யாதலைவர் (பிரின்ஸ்பால்) பிரும்மஸ்ரீ ச்வேதாரண்யம் நாராயணபஜ்வா, வேதகாவ்பபோதகர் பிரும்மஸ்ரீ வெ. ஸோமதேவசர்மா ஸ்மார்த்தர்களும், வைஷ்ணவர்களும் மத்துவர்களுமாகச் சேர்ந்து தவராமல் பிரதிதினம் வரும் மாணவர்கள் பதினறு **(16)** காலை $5\frac{1}{2}$-முதல் 7-வரை பாடம் நடைபெருகிறது. காலை ஸமிதாதானம், ஸூரியநமஸ்காரம், பிரும்மயக்ஞம் இவைகள் ஒவ்வொரு உபநயனமான மாணவராலும் அநுஷ்டிக்கப் படுகிறது, புருஷஸூக்தம், ஸ்ரீஸூக்தம் பஞ்சசாந்தி, பூஸூக்தம், ருத்ரம். முதலிய வேதபாகங்களும் ராமோதந்தம், விக்ரமார்க்க சரிதம் ரகுவம்ச சரிதம், பிரதமசிக்ஷை முதலிய காவ்பங்களும் நடந்தேறின. தாங்களே யக்ஞோபவீதம் நூற்றுத் தரித்துக்கொள்ளும்படி கற்பிக்கப்பட்டனர். ஸம்ஸ்கிருத பாஷையிலேயே பேசும்படி ப்ரச்னோத்தரங்களும் நேர்வழியும், கற்பிக்கப்படுகிறது. அநுபநீதர்கள் ஸஹஸ்ரநாமம் கற்பிக்கப்படுகின்றனர். ஆரம்பத்திலும் அவஸாநத்திலும் சிலஸ்துதிகள் சொல்கின்றனர். காலைஎழுந்திருக்

தல், ப்ராதஸ்நாநம், ஸந்த்யை, ஸமிதாதானம், பிரும்மயக்ஞம், ஸூரியநமஸ்காரம், முதலிய ஸதாசாரங்களைச் சிறுவர் விசேஷமாக ஆங்கிலம் கற்கும் மாணவர் கைப்பிடித்து நடத்துவது நம் மதாபிமானிகளுக்குஇன்பத்தை அளிக்கும். அநத்யயநதினங்களில் நித்யகர்மாநுஷ்டானத்தின் அவசியத்தையும், மேன்மையையும் இஹபரஸாதனத்தையும், மந்திரார்த்தத்துடன் பிள்ளைகளுக்குஉத்ஸாகமாய் போதிக்கும் ஆசிரியர் ஆங்காங்கு இதேபோல் ஸ்கூல் பிள்ளைகளைச் சீர்திருத்தும்படி உபன்யஸித்துவருகிறார். இப்பீடத்திலுள்ள கார்யதர்சி ஆந்திரப் பிராமண பத்திரிகாசிரியர் ஸ்ரீமான் அக்கினிஹோத்திரம் ரங்காசாரியாரவர்கள் வீடுவீடாகச் சென்று கலயம் கட்டிப்பிடி அரிசி வசூலித்து ஸபையைப் போஷிப்பது உஞ்சவிருத்தி செய்யும் உத்தமர்கள் செய்கையை யொத்திருக்கிறது. எவருக்கும் ஹிம்ஸைகொடாது இதேபோல் பல நகரங்களில் ஆஸ்திகர் இம்முறையைப் பின்பற்றும்படி இதைப் பிரசுரிக்கும் பத்திரிகாசிரியருக்கும் இதுபோன்ற ஸபைகளை கடாக்ஷத்தால் அநுக்கிரஹிக்கும் ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ காமகோடிபீடாதிபதிகளுக்கும் ஷை பீடசார்பாக வந்தனமளிக்கிறேன்.

வி. ரங்கநாதய்யர் பி. ஏ.

---

## முற்காலத்தில் நடந்த ஒரு தர்மஸ்தாபனம்

வடஆர்க்காடு ஜில்லா, விரிஞ்சிபுரங்கோயிலின் முன் கோபுரத்தில் வரையப்பட்டுள்ள சிலாசாஸனமொன்று, சென்னைச்சாஸன அத்யக்ஷரால் 'தென்னிந்திய சாஸனத்தொகுதி' என்ற புஸ்தகத்தின் முதல் ஸம்புடம் 83-ம் பக்கத்தில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. கன்னியாதான ஸம்பந்தமாக முற்காலத்தில் நிகழ்ந்த ஒரு தர்மஸ்தாபனத்தை இச்சாஸனம் அழகாகக் குறிப்பதால் ப்ராம்மணஸமூஹத்தாரனைவராலும் இது மிகவும் போற்றிக் கொள்ளற்குரியது. விஜயநகர அரசரான ஸ்ரீ வீரப்பிரதாப தேவராயருடைய ஆட்சிக்காலத்தில் சகவூ 1347 (கி. பி. 1425) ல்

தொண்டைமண்டலத்துப்படைவீட்டு ராஜ்பத்திலுள்ள அசேஷ ப்ராமண வித்வந் மஹாஜனங்களும் தங்களிலே ஒன்றுகூடிச் செய்துகொண்ட உடன்படிக்கையாக அச்சாஸனங்கூறுவதாவது.

“ ஸ்வஸ்தி ஸ்ரீமந் மஹாராஜாதிராஜ பரமேச்வரான ஸ்ரீ வீரப்பிரதாபதேவராய மஹாராஜா, ப்ருதிவீராஜ்யம் பண்ணியருளா நின்ற சகாப்தம் 1347-ன் மேல் செல்லாநின்ற விச்வாவஸு பங்குனிமீ 3உ ஷஷ்டியும் புதன்கிழமையும்பெற்ற § அநிஷத்து நாள், படைவீட்டு ராஜ்பத்து அசேஷவித்வந் மஹாஜனங்களும், அர்க்கபுஷ்கரணி கோபிநாத ஸந்நதியிலே தர்மஸ்தாபன ஸமயபத்ரம் பண்ணிக்கொடுத்தபடி:—

“ இன்றையநாள் முதலாக இந்தப் படைவீட்டு ராஜ்யத்து ப்ராஹ்மணரில் கன்னடிகர், தமிழர், தெலுங்கர், † இலாளர் முதலான அசேஷகோத்ரத்து அசேஷ ஸூத்திரத்தில் அசேஷசாகையில் உள்ளவர்களும் விவாஹம் பண்ணுமிடத்துக் கன்யாதானமாக விவாஹம்பண்ணக் கடவாராகவும். கன்யாதானம் பண்ணாமல் பொன்வாங்கிப்பெண் கொடுத்தால், பொன்கொடுத்து விவாஹம் பண்ணினால் இராஜதண்டத்துக்கு உட்பட்டுப் ப்ராஹ்மண்யத்துக்கும் புறம்பாகக்கடவர் என்று பண்ணின தர்மஸ்தாபன ஸமயபத்ரம்: இப்படி அசேஷ வித்வந் மஹாஜனங்கள் எழுத்து ... ... ... ... ... ”

என்று, பிராமணோத்தமர்கள் அநேகருடைய கையெழுத்துடன் இச்சாஸனம் முடிவுறுகின்றது. 500 வருஷங்கட்டு முன் தமிழ்நாட்டில் வாழ்ந்த எல்லாத் தேசத்துப் பிராமணர்களும் தங்களுள் எவ்விதமாக ஒற்றுமைப் பட்டிருந்தார்கள் என்பதற்கும் தங்கள் வழக்கவொழுக்கங்களில் சீர்கேடானவற்றைத் திருத்தித் தாங்கள் ஸமூஹத்தை உயர்த்துவதிலே அவர்கள் வைத்திருந்த உத்ஸாஹத்திற்கும் இச்சாஸனம் சிறந்த சாக்ஷியன்றோ ?

இந்த ஸமயபத்ரத்திலிருந்து, தமிழ்நாட்டின் ஒரு பிரதேசத்திலே, பொன்வாங்கிக் கொண்டு பெண்கொடுக்கும் துராசாரம் ப்ராஹ்மண குடும்பங்களில் பெரு வழக்கமாய், அதனால் சமூ

---

§ அனுஷத்து நாள். † இலாளர்-கூர்ஜரர்.

கக் கேடுகளும் கஷ்ட நஷ்டங்களும் உண்டாயின என்றும், அக் கேடு வழக்கத்தை மாற்றுவதில் எல்லா நாட்டுப் பிரமணத்தலைவர்களும் முனைந்து நின்று மஹாஸபைகூடிக் கன்யாதானமாகவன்றி இனிமேலும் பொன்பெற்றுப் பெண்கொடுத்தும் பொன்கொடுத்துப் பெண்பெற்றும் அஸுரவிவாஹ முறையை அனுஷ்டிக்கும் இருதிறத்தாருக்கும் இராஜதண்டனையும் ஜாதிவிலக்கும் கடுமையாக விதிக்கலாயினர் என்றும் தெரியலாம். 500 வருஷங்கட்கு முன் நம் சமூகத்தினருள் இருந்த இந்த அழகான ஐகமத்யமும் ஆசாரத்திருத்த ஊக்கமும் இப்போதும் நம்மவர்க்குள் இருக்குமானல், நம் ஸமூகம் எவ்வளவோ விருத்தியடையக்கூடுமன்றோ.

பணம்வாங்கிக்கொண்டு பெற்றோர் தம் கன்னியரை மணம் புரிவிப்பதை ஏழைக்குடும்பங்களிலும் பணங்கொடுத்துப் பெண் கொள்வதை த்விதீய, த்ரிதீய விவாஹங்கள் செய்து கொள்வோரிடமும் தற்காலத்தும் நாம் மிகுதியாகக் காணலாம். இம்முறை சில சமயங்களில் ஏழ்மை நிலைக்குச் சிறிது உதவிபோலத் தோன்றினும், உண்மையில் சமூகத்துக்குப் பெருங்கேடே விளைவிக்கக் கூடியது. ஏனெனில், அப்படிப் பணம்பெற்றுப் பெண் கொடுப்போர், தம்குடும்பத்து ஆண்மக்களுக்கு விவாஹம் புரிய நேரும்போது, இதே கஷ்டத்தைத் திரும்ப அனுபவிக்க வேண்டியவராகின்றனர். அதனல், இத்துராசாரம் அடியோடு ஒழிவது எவ்வகையாலும் நன்மையாகும்.

கன்யாதானமாகவே தங்கள் பெண்களைக் கொடுக்க விரும்பும் பிராமண குடும்பங்கள் பலவுண்டு. தங்கள் பெண்களின் நல்வாழ்க்கையை விரும்பி லௌகிக விருத்திக்கேற்ற ஆங்கிலக் கல்விபயின்ற வரன்களைத் தேடப்புகும்போது, இக்குடும்பங்கள் இக்காலத்தடையும் கஷ்ட நஷ்டங்கள் பல. 'வாதக்ஷிணை' என்று பெண்வீட்டாரை நிர்ப்பந்தப் படுத்திப் பிள்ளைவீட்டார் பெறுந் தொகை பற்றும் துராசாரம், சில பிரதேசங்களிலே தற்கால நாகரீகங்களில் ஒன்ருகி விட்டது. இவ்வாறு பணம் பெற்றுப்பெண் கொள்வோர், தங்கள் குடும்பத்துப் பெண்களின் பொருட்டுத் தாங்களும் இதேநிர்ப்பந்தத்துக்கு உள்ளாகவேண்டியவராதலைச் சிறிதேனும் நினைப்பதில்லை. இவ்வகைத் தீயவழக்கம் போன்ற

வை எத்தனையோ, நம்மவர்க்குள் ஏற்பட்டிருக்கின்றன. இவை யெல்லாம் மேற்கூறிய தர்மஸ்தாபன ஸமயபத்ரத்திற் கண்ட முறையே, கட்டுப்பாடாய் ஒழிக்கப்பெற்ருலன்றி, பிராமணரின் லௌகிகவிருத்திக்குத்தடைகள்மிகுந்துவரும் இக்காலத்தே, நம்முடைய மஹா ஸமூகம் உலகவாழ்க்கையில் முட்டுப்பட நேருமென்பதில் தடையில்லை. பிராமணத்தலைவர்களும், மஹதாசார்யரவர்களும், இதுபோன்ற ஸமூகத்திருத்தங்களைச்செய்யமுனைந்து நின்ருலன்றி இதற்கு வேறு கதியில்லை. இந்த தர்மஸ்தாபநார்த்தமாக எம்பெருமான் திருவருளும் உண்டாவதாக.

மு. இராகவையங்கார்,

---

# ஸ்வதர்மத்தை விடவேண்டாம்.

தற்சமயம் பெரும்பாலும் எம்மதத்திலும் விசேஷமாக நம் மதத்திலும் அதிலும் முக்கியமாக பிராமணர்கள் ஆசார அநுஷ்டானத்திலும் அசதி ஏற்பட்டிருக்கிறது. இது ஏற்கனவே நமது முனிவர்களால் எதிர்பார்க்கப்பட்டதே. காலமே இதற்கு முதற் காரணமாம் ( यत्रस्वप्रतिभामानं तस्मैश्रीकलये नमः ) தன் புத்தியே பிரமாணமாகத் தோற்றுவிக்கும் கலியின் இயற்கையே அது. ஆதலால் மதம் என்ற ஏணியைக்கொண்டு பேரானந்தத்தைப்பெற வேண்டுமென்பதை மறந்து தத்தமக்குத்தோன்றியபடி ஒரு சிறு கூட்டத்தைக் கூட்ட தானே தலைவாகத்தோன்றி தன்னையும் தன்னைப் பின்பற்றியவரையும் படுகுழியில் தள்ளும் குருட்டுப் போலிகுரு மலிந்து கிடக்கிறது, ஏதோ ஒன்றிரண்டு விஷயத்தில் தனக்கனுகுணமான பதிலைக்கொண்டு நம் ஸநாதநதர்மத்தின் விதிவிலக்குகளுக்குப் பயந்து முன்னதைப்பின் பற்றுவோர் சிலர் உண்மையான உயரிய மததத்வங்களை உணராமல் உணர்த்துவோரிடம் செல்லாமல் தானே சில துராக்ஷேபங்களை மனதிற்கொண்டு ஒருவித சிரமமில்லாமல் தேஹாலங்காரத்துடனும் ஆடம்பரப்பேச்சுடனும் மோக்ஷத்தை எட்டிப்பிடித்துவிடுவதாகநினைப்பவர் சிலர். இவைகளால் சிறிதளவும் நன்மையடைய முடியாது.

அன்றியும் தவப்பயத்தால் தான் பெற்ற உயர்ந்த ஜன்மத்தையும் இழக்க நேரிடும் என்பதே சாஸ்திரஸித்தாந்தம். அர்த்தவாத பரமாக

कुर्यादन्यन्न वा कुर्यात् मैत्रो ब्राह्मण उच्यते ।

அந்தணரென்போர்........ எவ்வுயிர்க்கும் செந்தண்மை....... என்ற வாக்கியங்களைப் பிரமாணமாகக்கொண்டு யாகம் செய்வது பாபமென்றும் தின்டாமைப்பாராட்டுவது தீதென்றும் வேஷமான ஸந்தியாதிகர்மாவில் யாது பயனென்றும் சில பெரியிடத்துப்பேச்சு ஸாமான்யர்களை அசைக்கிறது.

हसद्भिः क्रियते कर्म रुदद्भिरनुभूयते ।
रुदद्भिः क्रियते कर्म हसद्भिरनुभूयते ॥

சிரித்துச் செய்வது அழுது அநுபவிக்கப்படுகிறது. அழுதுகொண்டே செய்யப்படுவது சிரித்துக்கொண்டே அனுபவிக்கப்படுகிறதென்பதை ப்ரத்யக்ஷ அனுபவத்தில் காண்கிறோம். ஸ்வதர்மாசரணம் குழந்தைகளுக்கு விளக்கெண்ணெபோல் நமக்குக் கஷ்டமாகத்தானிருக்கும். அதன் நலத்தை நாமுணர்வதுபோல் நம் தாய்போன்ற வேதம் ஸ்மிருதிகள் கூறியவை. நம்மைக் கெடுப்பவையல்ல. கேவல சித்தபரிபாகமில்லாத அறிவால் மட்டும் பௌதிக விஷயத்தில் எக்காரியமேனும் பிரயத்னமின்றி கைகூடியதைக் காணோம். அதேபோல் கீதை என்றும் கைவல்யமென்றும்கூறி ஸ்வதர்மத்தை விடுபவன் நற்கதிபெறமாட்டான் இம்மையே சாச்வதமென்றெண்ணி பொருளீட்டவும் உடலை அலங்கரிக்கவும் மனக்குரங்கை ஆட்டிவிக்கவும் காலத்தைச் செலவிடுவோர் காலனைக்கண்டு என் சொல்வார்? போதுமானவரை நம்சிற்றறிவை வளர்க்க முன்னோர் பல வழி திறந்துவிட்டிருக்கின்றனர். अन्धेनैव नीयमाना यथान्धाः குருடும் குருடுங்கூடி என்பதுபோல் தற்கால முனிவற் தோற்றிய எம்மதச் சங்கத்திலும் சேராது ஸ்வகர்மாநுஷ்டானங்களை ஆசரித்து அதற்கனுகுணமான உபன்யாஸங்களைக் கேட்கில் எச்சந்தேகமும் ஒழியும். அதிலும் தீருதவை "भिद्यते हृदयग्रन्थिः" என்றபடி பரமார்த்த ஸ்வரூபத்தைச் சித்தசுத்தி மூலமணுகும் போது தானே தீரும்.

ஸ்ரீவத்ஸ வெ. ஸோமதேவசர்மா.